# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **182/2015**

ஆணை எண். **101/2016**

நாள் : **30/05/2016**

திரு A.D. மோகன் பாபு
சங்கத் தலைவர்,
அண்ணா பொதுப்பணியாளர்கள் சங்கம்,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.
– முறையீட்டு மனுதாரர்

உதவி நல அலுவலர்,
மண்டலம் – 13,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 020.
– எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, அண்ணா பொதுப்பணியாளர்கள் சங்கத் தலைவர் திரு. A.D மோகன் பாபு அவர்களது முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.08.2015 அன்று பெறப்பட்டு 182/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆணை**

சென்னை மாநகராட்சி, அண்ணா பொதுப்பணியாளர்கள் சங்கத் தலைவர் திரு.A.D மோகன் பாபு அவர்கள், அம்மாநகராட்சியின் 13 வது மண்டல நல அலுவலர் மீது சில குற்றச் சாட்டுகளை தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்திடம் முறையீடு செய்துள்ளார். மேற்படி மண்டல நல அலுவலர் தனது மண்டலத்தின் சுகாதார சீர்கேட்டிற்கு காரணமாக உள்ளார் என்றும் ஒப்பந்தப் பணியாளர்களின் மாத ஊதியத்தில் முறைகேடுகள் நிகழ்வதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் சம்பந்தமாக 14.03.2016 அன்று மாநகராட்சி 13 வது மண்டல அலுவலர் விசாரிக்கப்பட்டார் மேற்படி விசாரணையின் போது மண்டல அலுவலர் என முகவரியிட்டு மண்டல நல அலுவலரால் அனுப்பப்பட்ட அறிக்கை தன்னால் அனுப்பப்படவில்லை என தெரிவித்தார். 13 வது மண்டலத்தில் பணியாற்றிய களப்பணியாளர் திரு நாராயணன் என்பவருக்கு 10 வது மண்டலத்திற்கு பணி மாறுதல் அவரது வேண்டுகோளின் படியே பணிமாறுதல் வழங்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் அளித்துள்ள புகார்கள் சம்பந்தமாக மண்டல நல அலுவலர் அளித்துள்ள அறிக்கையில் புகார்கள் மறுக்கப்பட்டுள்ளன. புகார் மனு வெவ்வேறு காரணங்களுக்காக மறைமுகமாக ஆதாரமற்ற முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் 07.04.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு விசாரணைக்கு வருகை தந்து உரிய வாக்குமூலமும் அளித்துள்ளார். விசாரணையின் பொழுது தான் நிர்வாகப் பணியில் செயல் பட்டது இல்லை என்றும் அலுவலக நடைமுறையை அறியாததால் 13 வது மண்டல அலுவலர் என அனுப்புநர் முகவரியிட்டு தன் கையொப்பமிட்டு முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை அனுப்பியதாக தெரிவித்தார். மேலும் மலேரியா பணியாளராகப் பணியாற்றிய திரு நாராயணசிங் என்பவரை பணியிடமாற்றம் செய்த காரணத்தினால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தொழிற்சங்கங்கள் மூலம் புகார்கள் தெரிவிப்பது வழக்கம் என்றும் கூறியுள்ளார்.

4. 13 வது மண்டல நல அலுவலர் டாக்டர் விஜய சாமுண்டீஸ்வரி குறித்து பத்திரிகை மற்றும் வார, மாத இதழ்களில் வெளியிடப்பட்ட செய்திகளை இம்முறைமன்ற நடுவம் கவனிக்க நேர்ந்தது. உயர் அதிகாரிகளின் ஆதரவு தனக்கு இருப்பதாக தெரிவித்து அப்பாவி ஊழியர்களை மிரட்டுதல் மற்றும் தனக்கு கீழ் பணியாற்றும் அலுவலர்களை மிரட்டி வசூல் வேட்டை நடத்துவது போன்ற செய்திகள் குறித்தும் இம்முறைமன்ற நடுவம் கவனத்தில் கொள்ளநேர்ந்தது. சம்பந்தப்பட்ட புகார்களில் உண்மையில்லை என மண்டல நல அலுவலர் மறுத்துள்ளார். மேலும் தான் அலுவலக பணியை முறையாக செய்யவேண்டும் என்ற நோக்கில் தனக்குக் கீழ் பணியாற்றும் அலுவலர்களிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வதால் இது போன்ற புகார்களுக்கு தான் உட்படுவதாகவும் தெரிவித்துள்ளார். வருங்காலங்களில் இதுபோன்று புகார்களுக்கு இடம் தராமல் மேற்படி மண்டலநல அலுவலர் பணியாற்ற வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் அறிவுரை வழங்குகின்றது.

5. மனுதாரர் திரு.A.D மோகன்பாபு அவர்களுக்கு இரண்டு முறை அழைப்பாணை அனுப்பியும் அவர் விசாரணைக்கு வரவில்லை. தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் அதிகாரி மீது புகார் தெரிவித்து விட்டு விசாரணைக்கு வராமல் இருப்பது மிகவும் கண்டிக்கத் தக்கது. விசாரணைக்கு வருகை தந்து உரிய விளக்கம் அளித்து, குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் மீதான புகார்களின் உண்மைத்தன்மையை கண்டறிய மனுதாரர் ஒத்துழைக்கவில்லை. மேலும் புகார்கள் தெரிவிப்பதும், புகார் சம்பந்தமான விசாரணைக்கு வர தவறுவதும் முறைமன்ற நடுவர் மற்றும் அலுவலர்களின் கால நேரத்தை விரயமாக்குவதுடன் பிற பணிகளின் செயல்பாட்டிற்கும் தடையாக இருந்துள்ளார். எனவே சென்னை மாநகராட்சி அண்ணா பொதுப்பணியாளர்கள் சங்கம் என்ற அமைப்பின் பின்னனியில் மனுதாரர் திரு.A.D மோகன் பாபு அவர்கள் முறையற்ற புகார்கள் தெரிவித்த செயலுக்காக ரூபாய் 500/- அபராதம் விதித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேற்படி அபராதத் தொகையினை மனுதாரரிடமிருந்து நபரிடமிருந்து 2 மாத கால அவகாசத்திற்குள் வசூலித்து சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தும்படி சென்னை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். அபராதத் தொகையினை குறிப்பிட்ட கால அளவுக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2014ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 12(1)(b) எண்ணிட்ட பிரிவின்படி 1864ஆம் ஆண்டு வருவாய் பிடித்தச் சட்டத்தின் கீழ் வசூலிக்கவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

திரு A.D.. மோகன் பாபு
சங்கத் தலைவர்,
அண்ணா பொதுப்பணியாளர்கள் சங்கம்,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

உதவி நல அலுவலர்,
மண்டலம் – 13,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 020.

நகல்

மாநகராட்சி ஆணையர்,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.